Alcohol and Drug
Information Centre

ADIC

*No.40/18, Park Road, Colombo 5, Sri Lanka.*
*Tel: +94 11 2584416, +94 11 2592515, Fax: +94 11 2508484*
*E-mail: info@adicsrilanka.org, adicc@sltnet.lk*
*Web Site: http://www.adicsrilanka.org*

ஊடகச் செய்தி

30.09.2024

**ஒக்டோபர் 03ம் திகதி, சர்வதேச மதுசார தடுப்பு தினத்தை முன்னிட்டு மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தினால் வெளியிடப்படும் ஊடகச் செய்தி**

**மதுசார பாவனையினால் அரசாங்கத்திற்கு வருடாந்தம் ஏற்படும் சுகாதார மற்றும் பொருளாதார செலவீனங்கள் ரூபா 237 பில்லியன்களாகும்.**

ஒக்டோபர் 03ம் திகதி உலக மதுசார தடுப்பு தினமாகும். மதுசார பாவனையினால் வருடாந்தம் உலகலாவிய ரீதியில் சுமார் 03மில்லியன் பேர் அகால மரணமடைகின்றனர். சரவதேச ரீதியாக ஏற்படும் 10 மரணங்கள் 08 மரணங்கள் தொற்றா நோய்களினாாலேயே ஏற்படுகின்றன. தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான பிரதான நான்கு காரணங்களுள் முதன்மை காரணமாக மதுசார பாவனை காணப்படுகின்றமைக் குறிப்பிடத்தக்கது.

நாடு என்ற ரீதியில், மதுசாரம் மற்றும் போதைப்பொருள் பாவனைகளால் பல்வேறு வகையான சுகாதார, பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எமது நாட்டில், மதுசார பாவனையினால் தினமும் சுமார் 50 பேர் அகால மரணமடைவதுடன் வருடாந்தம் சுமார் 15000 – 20000 பேர் அகால மரணமடைகின்றனர். மேலும் 2022 ஆம் ஆண்டு மதுசாரத்தினால் கிடைக்கப்பெற்ற மதுவரி வருமானம் ரூபா பில்லியன் 165 ஆகும். 2023ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி 2022ஆம் ஆண்டு மதுசார பாவனையினால் ஏற்படும் பொருளாதார மற்றும் சுகாதார சீர்கேடுகளுக்காக ரூபா பில்லியன்கள் 237 செலவிடப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கது, ஆகவே மதுசாரம் ஒரு நாட்டிற்கு இலாபகரமானது அல்ல என்பதும் தெளிவாகின்றது. மேலும் மதுவரியினால் கிடைக்கப்பெறும் வரி வருமானத்தை விட மதுசார பாவனையினால் ஏற்படும் பொருளாதார மற்றும் சுகாதார செலவீனங்கள் அதிகம் என்பது இப்பகுப்பாய்வின் மூலம் விஞ்ஞான ரீதியாக ஒப்புவிக்கக்கூடியதாகவுள்ளது.

2006ஆம் ஆண்டு 27ஆம் இலக்க, தேசிய மதுசாரம் மற்றும் புகையிலை மீதான அதிகார சபை சட்டத்தின் படி, மதுசாரம் மற்றும் புகைப்பொருள் விளம்பரங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. எனினும் இச்சட்டத்தை மீறும் வகையில் மதுசார நிறுவனங்களால் பிள்ளைகளையும், இளைஞர்களையும் இலக்கு வைத்து பல்வேறு விளம்பரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இளைஞர்களும், சிறுவர்களும் மதுசார நிறுனவங்களின் பிரதான இலக்குக் குழுக்களாகும். மதுசார பாவனையினால் அகால மரணமடைகின்ற ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கு பதிலாகவும் இளைஞர்களையும், சிறுவர்களையுமே இலக்கு வைக்கின்றனர், அதற்காக மதுசாரத்திற்றான கவர்ச்சியை அதிகரித்து காண்பிப்பது குறிப்பிட்ட மதுசார நிறுவனங்களின் இலக்காகும்.

மதுசார பாவனையில் வீழ்ச்சி ஏற்படுவதானது நாட்டிற்கு சிறந்தவொரு குறிகாட்டியாகும். அதாவது மதுசார பாவனையில் வீழ்ச்சி ஏற்படும் போது, சுகாதார செலவீனங்கள் குறைவடையும், பொது மக்களின் சுகாதாரம் விருத்தியடையும், குடும்பங்களுள் மகிழ்ச்சி, ஒற்றுமை ஆகியன விருத்தியடையும். உலக சுகாதார நிறுவனத்தின் கூற்றின் படி, மதுசாரத்திற்கான வரி அறவிடுதல் மற்றும் விஞ்ஞான ரீதியாக மதுசாரத்திற்கான விலையை நிர்ணயித்தல் ஆகியவை விஞ்ஞான ரீதியானதும், செலவீனம் குறைந்ததுமான பயனுள்ள மதுசாரக் கட்டுப்பாட்டு முறைமையாகும்.

மதுசாரத்திற்கான வரியை அதிகரிக்கும் போது மதுவரி வருமானத்தை அதிகரித்துக்கொள்ள முடிவதுடன், மதுசார பாவனையைக் குறைத்துக்கொள்ளவும் இயலும். கடந்த வருடத்தில் மதுவரி அறிக்கைகளின் பகுப்பாய்வை மேற்கொள்ளும் போது, மதுசாரத்திற்கான வரி 34வீதம் அதிகரிக்கப்பட்டதால் மதுவரி வருமானம் அதிகரிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்ற வரி வருமானமும் அதிகரித்துள்ளது என்பது தெரியவந்துள்ளது. 2022ஆம் ஆண்டு மதுவரி வருமானம் ரூபா பில்லியன்கள் 165.2 ஆக காணப்பட்டதுடன் 2023ஆம் ஆண்டு மதுவரி வருமானம் ரூபா பில்லியன்கள் 181.10 ஆக அதிகரித்துள்ளது. ஆகவே, நிர்ணயிக்கப்பட்ட விலைச்சூத்திரத்தின்படி மதுசாரத்திற்கு வரி அறவிடுவதன் மூலம் மதுசாரத்தின் பயன்பாட்டைக் குறைக்கவும், அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கவும், மதுசாரத்தினால் ஏற்படும் சுகாதார மற்றும் பொருளாதாரச் செலவுகளைக் குறைக்கவும் முடியும். மதுசார பயன்பாட்டைக் குறைப்பதற்கும் மதுசார பாவனையை ஆரம்பிக்கும் வீதத்தை குறைப்பதற்கும் வரி அறவீடு மற்றும் விலை நிர்ணயம் ஆகியன சிறந்ததொரு வழிமுறையாகும்.

புதிய அரசாங்கத்தின் ஆட்சியில், புதிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ள இவ்வேளையில் நாட்டில் காணப்படும் மதுசாரப் பிரச்சினைகளைக் குறைப்பதற்காக மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள பின்வரும் முன்மொழிவுகளை அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்துமென நாம் நம்புகின்றோம்.

**மதுசார பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள்**

01. பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றவாறு ஒவ்வொரு ஆண்டும் கலால் வரி அதிகரிக்கும் விஞ்ஞான வரி சூத்திரத்தை நடைமுறைப்படுத்துதல்.

02. மதுசார நிறுவனங்களால் ஏற்கனவே அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரிகளை மீளப்பெறுவதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்குமான முறையான வரி அறவீட்டு முறையைத் தயாரித்தல்,.

03. மதுசார பயன்பாடு மற்றும் ஊக்குவிப்பைக் குறைப்பதற்கான தற்போதைய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல், அத்துடன் மதுசாரம் மற்றும் புகையிலை மீதான் தேசிய அதிகார சபையின் (NATA) உத்தேச திருத்தங்களை விரைவாக அமுல்படுத்துதல்

04. தற்காலிக மதுசார அனுமதிப்பத்திரங்களை வழங்காதிருத்தல் மற்றும் சுற்றுலாத் தொழில் என்ற போர்வையில் வழங்கப்படும் அனுபதிப்பத்திரங்களுக்கான பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துதல்

05. 2016ஆம் ஆண்டு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட மதுசாரக் கட்டுப்பாடு தொடர்பான தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்.

06. சட்டவிரோத மதுசார வகைகளை கட்டுப்படுத்துவதற்கு தேவையான சட்டங்களை அமுல்படுத்துதல். மேலும் அந்த நோக்கத்திற்காக செயற்படும் நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கு நடவடிகைகளை மேற்கொள்ளல்.

07. மதுசார பாவனைக்கு ஆளாகுவதற்கு முன்னரே இளைஞர்களையும், சிறுவர்களையும் பாதுகாப்பதனை நோக்கமாகக் கொண்டு தொடர்த்தேர்ச்சின தேசிய போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டததை நடைமுறைப்படுத்துதல்.

08. மதுசார பாவனையாளர்களை அப்பாவனையிலிருந்து விடுதலையாக்குவதற்காக ஆலோசனை, சிகிச்சைகள், பிற சேவைகள் மற்றும் தேவையான திட்டங்களை வகுத்து செயற்படுத்துதல்.

09. ஏற்கனவே காணப்படும் கொள்கைகளை வலுவிழக்கச் செய்வதற்கும், புதிய கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கும் மதுசாரத் தொழில்துறையின் தலையீடுகளை தடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

மேற்படி பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முறையான வேலைத்திட்டத்தை புதிய அரசாங்கம் தயாரித்து இம்முறை மதுசார தடுப்பு தினத்தில், மதுசார பிரச்சினைகளை நாட்டில் குறைத்துக்கொள்வதற்காக விரைந்து செயற்படும் என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் (ADIC) எதிர்ப்பார்க்கின்றது.

சம்பத் த சேரம்,
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்